**Crl. Misc.39**
**Pg.No.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No. 19 /2026**

Deposition of Witness : LW3 /PW3

| Name | விஜயகுமார் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | மூக்ககவுண்டர் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 16.06.2026.** | | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் பெரியகுளத்துபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டெக்சில் எம்பிராய்டிங் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பங்கஜவல்லி எனக்கு நன்கு தெரியும். அ.சா.2 சதீஷ்குமார் எம்பிராய்டிங் தொழில் மூலம் எனக்கு பழக்கம் உள்ளது. 13.01.2026 ம்தேதியன்று மாலை 5 மணி அளவில் அ.சா.2 சதீஷ்குமாரை பார்க்க அவர் வீட்டிற்கு சென்று, நாங்கள் இருவரும் வெளியே பேசி கொண்டிருந்தோம். அப்போது பங்கஜவல்லியின் வீட்டிற்கு பின்னால் குடியிருந்து வரும் வசந்தகுமார் முருங்கை மரத்தை அரிவாளால் வெட்டினார். வீட்டில் இருந்து வெளியே வந்த பங்கஜவல்லி ஏன் முருங்கை மரத்தை வெட்டுகிறாய் என்று கேட்டபோது தகராறு ஏற்பட்டது. அ.சா.1 ன்கையை பிடித்து, முறுக்கி கீழே தள்ளிவிட்டார். தேவடியா புண்டமவளே என்று தகாத வார்த்தைகளால் திட்டி, அரிவாளால் வெட்டி விடுவேன் என்று மிரட்டினார். பின்னர் அரிவாளை கீழே போட்டு சென்றுவிட்டார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) அ.சா.1 ஐ எனக்கு எவ்வளவு வருடங்களாக தெரியும் என்றால் 3 வருடங்களாக

Sd/–T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், கரூர்.

தெரியும். ஒரே தெருவில் வசித்து வருகிறோம் என்றால் நான் அடுத்த தெருவில் வசித்து வருகிறேன். எனது வேலை நேரம் எவ்வளவு என்றால் நான் சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். சம்பவம் நடந்தபோது நான் யாரை பார்க்கபோனேன் என்றால் சதீஷ்குமாரை தொழில் விசயமாக பார்க்க போனேன். முருங்கை மரம் எந்த இடத்தில் உள்ளது என்றும், யாருக்கு சொந்தமான இடத்தில் உள்ளது என்றால் அ.சா.1 வீட்டிற்கு எதிரில் ரோட்டில் உள்ளது. மேற்படி ரோடு பொதுவானது என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது நான் தடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தபின் அ.சா.1 ற்கு எந்த உதவியும் செய்தேனா என்றால் நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவேண்டுமா என்று அ.சா.1 இடம் கேட்டேன், அ.சா.2 அவ்வாறு மருத்துவமனைக்கு அழைத்து செல்லவேண்டுமா என்று கேட்டாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 எனக்கு நன்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No. 19 /2026**

Deposition of Witness : LW2 /PW2

| Name | சதீஷ்குமார் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | அலெக்சாண்டர் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 16.06.2026.** | | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் பெரியகுளத்துபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டெக்சில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பங்கஜவல்லி எனது பக்கத்துவீட்டுக்காரர் ஆவார். 13.01.2026 ம்தேதியன்று மாலை 5.30 மணி அளவில் நானும்,எனது நண்பர் விஜயகுமார் என்பவரும் எனது வீட்டிற்கு முன்பாக நின்று பேசி கொண்டிருந்தோம். அப்போது அ.சா.1 பங்கஜவல்லியின் வீட்டிற்கு பின்னால் குடியிருந்து வரும் வசந்தகுமார், பங்கஜவல்லியின் வீட்டிற்கு முன்னால் உள்ள முருங்கை மரத்தை அரிவாளால் வெட்டினார். அந்த சத்தம் கேட்டு வீட்டிற்குள் இருந்த பங்கஜவல்லி வெளியே வந்து ஏன் முருங்கை மரத்தை வெட்டுகிறாய் என்று வசந்தகுமாரை கேட்டதற்கு நான் அப்படிதான்மா வெட்டுவேன் என்று சொல்லி தேவடியா புண்டமவளே என்று தகாத வார்த்தைகளால் திட்டினார்.

2) மரத்தை வெட்டுவதை அ.சா.1 பங்கஜவல்லி தடுக்கசென்றபோது ஆஜர் எதிரி வசந்தகுமார் கையை பிடித்து, என்னிடம் வச்சு கொண்டால் அரிவாளால் வெட்டி கொன்றுவேன் என்று மிரட்டினார். கையை பிடித்து முறுக்கி, கீழே தள்ளிவிட்டு, அரிவாளை அங்கே கீழே போட்டு சென்றுவிட்டார். போலிசார் என்னை விசாரணை

Sd/-T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், கரூர்.

செய்தார்கள். நான் நடந்த சம்பவத்தை கூறினேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் எத்தனை வருடங்களாக மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து வருகிறேன் என்றால் 6, 7 மாதங்களாக குடியிருந்து வருகிறேன். நான் எந்த டெக்சில் வேலை செய்து வருகிறேன் என்றால் மல்லிகா டெக்சில் வேலை செய்து வருகிறேன். வேலை நேரம் என்ன என்றால் வேலையை பொறுத்து இருக்கும், பொதுவாக காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை வேலை இருக்கும், சில நாட்கள் வேலை முடிந்துவிட்டால் சீக்கிரம் வந்து விடுவேன். சில நாட்கள் தாமதம் ஆகும். அ.சா.1 பங்கஜவல்லி எனக்கு நன்கு தெரிந்தவர் என்றால் சரிதான். நான் அங்கு 2013 ல் நிலம் வாங்கியதிலிருந்து அவரிடம் பக்கத்துவீட்டுக்காரர் என்ற முறையில் பேசி வருவேன்.

2) முருங்கை மரம் யாருடைய இடத்தில் உள்ளது ரோட்டில் உள்ளது. அ.சா.1 பங்கஜவல்லி வீட்டின் எதிரில் உள்ளது. மேற்படி மரம் பொதுவான மரம் என்றால் பொது இடத்தில் உள்ளது, பங்கஜவல்லி மேற்படி மரத்தை பராமரித்து வந்தார். சம்பவம் நடந்தபோது நான் தடுக்க முயற்சிக்கவில்லை என்றால் சரிதான். ஏன் நான் தடுக்கவில்லை என்று போலிசாரிடம் தெரிவித்தேனா என்றால் இல்லை. எதிரி அடிக்கடி மதுபோதையில் வந்து பிரச்சனை செய்வார். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 எனக்கு நன்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி அ.சா.1 ஐ கையை பிடித்து முறித்து, கீழே தள்ளியதாக சொல்லியுள்ள நிலையில் அ.சா.1 ற்கு காயம் எதுவும் ஏற்பட்டதா என்றால் இல்லை. சம்பவம் நடந்த பின்னிட்டு, அ.சா.1 ற்கு நான் எந்தவகையிலும் உதவி செய்யவில்லை என்றால் சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**CC .No. 19 /2026**

Deposition of Witness : LW1 /PW1

| | | | |
|---|---|---|---|
| Name | பங்கஜவல்லி | Taluk | |
| Husband Name | பரமசிவம் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 16.06.2026.** | | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் பெரியகுளத்துபாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் எம்பிராய்டிங் வேலை செய்து வருகிறேன். என் கணவர் இறந்து 21 வருடங்களாகிறது. எனது ஒரே மகன் அவருக்கு திருமணமாகி வெளியூரில் வசித்து வருகிறார். நான் தனியாகத்தான் வசித்து வருகிறேன். 13.01.2026 ம்தேதி மாலை 5.30 மணிக்குமேல் நான் வீட்டிற்குள் இருந்துகொண்டு வீட்டு வேலை செய்து கொண்டிருந்தபோது வெளியே மரம் வெட்டுவதுபோல் சத்தம் கேட்டது. நான் வெளியே வந்து பார்த்தபோது எனக்கு சொந்தமான முருங்கை மரத்தை வசந்தகுமார் அரிவாளால் வெட்டிக்கொண்டிருந்தார். வசந்தகுமார் எங்கள் வீட்டிற்கு பின்னால் குடியிருந்து வருகிறார்.

2) நான் எதற்காக மரத்தை வெட்டுகிறாய் என்று வசந்தகுமாரை கேட்டதற்கு அப்படிதான் வெட்டுவேன், தேவடியா புண்டமவளே என்று அசிங்க அசிங்கமாக வார்த்தைகளை பேசி, என்கையை பிடித்து முறுக்கி , கீழே தள்ளிவிட்டார். பின்பு அரிவாளை கீழே போட்டு ஓடிவிட்டார். பக்கத்தில் பக்கத்து வீட்டுக்காரர் சதீஷ் இருந்தார். அடிக்கடி மதுபோதையில் என்னிடம் வந்து தகராறு செய்து வருவதால் மறுநாள் காலையில் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையொப்பம்

Sd/-T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், கரூர்.

என்னுடையதுதான். புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கை முறுக்கப்பட்டதற்கு நான் வீட்டிலேயே இருந்து எண்ணெய் வைத்தியம் செய்து கொண்டேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். காவல்நிலையத்தில் கொடுத்த புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான்தான் எழுதினேன். புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள சம்பவங்கள் நானே கைப்பட எழுதினேன் என்றால் சரிதான். புகார் மனுவில் உள்ள கையொப்பம் மாறுபாடாக உள்ளது என்றால் புகார் மனுவை நான் நினைத்து நினைத்து எழுதினேன். நான் எங்கு வேலை செய்து வருகிறேன் என்றால் நான் வீட்டிலேயே பீஸ் வாங்கி எம்பிராய்டிங் வேலை செய்து வருகிறேன். எதிரி முருங்கை மரத்தை வெட்டியதாக சொல்லியுள்ள நிலையில் முருங்கை மரத்திற்கும், எனது வீட்டிற்கும் இடையில் என்ன உள்ளது என்றால் ரோடு உள்ளது, முருங்கை மரம் எங்கள் வீட்டிற்கு எதிரில் காலி இடத்தில் உள்ளது.

2) மேற்படி காலி இடம் யாருக்குசொந்தமானது என்றால் என்னுடையது இல்லை. முருங்கை மரத்திற்கும், எனது வீட்டிற்கும் எவ்வளவு இடைவெளி என்றால் 12 அடி இருக்கும். எனக்கும், எதிரிக்கும் வரவு செலவு பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை. எனக்கும், எதிரிக்கும் நிலம் சம்பந்தமாக ஏதேனும் பிரச்சனை உள்ளதா என்றால் அவர் குடித்துவிட்டு வந்து பிரச்சனை செய்வார். காவல் நிலையத்தில் நான் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் சம்பவம் நடந்து மறுநாள் காலையில் புகார் கொடுத்தேன். நான் அன்றே புகார் கொடுக்கவில்லை என்றால் சம்பவம் நடந்து இரவாகிவிட்டதால் அடுத்த நாள் சென்று புகார் கொடுத்தேன். இரவாகிவிட்டதால் சம்பவத்தன்றே புகார் கொடுக்க இயலவில்லை என்று காரணம் குறிப்பிட்டு புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரியை பழிவாங்கவேண்டும் என்ற நோக்கத்தோடு பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல் நடந்திருந்தால் எனக்கு காயம்

Sd/–T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், கரூர்.

ஏற்பட்டிருக்கும் என்றும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–T.Wajitha Thabassm
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், கரூர்.